**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 198 of 2022

Deposition of D.W. 1

Name of the Witness: திரு.மாதையன்

Date : 19.12.2024

**குறுக்கு விசாரணை**

பிரமாண வாக்குமூலததில் உள்ள விவரங்களை நான் படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன். இந்த வழக்கின் முழு விவரமும் எனக்கு தெரியும். நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன்.எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். ஆங்கிலம் ஓரளவுக்கு தெரியும். ஆங்கிலம் படிக்க தெரியும். என்னுடைய திருமணம் என்னுடைய தாய், தந்தை பார்த்து செய்து வைத்தது தான். என்னுடைய மூத்த சகோதரி பழனியம்மாவின் மகளை தான் நான் திருமணம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் அச்சு தொழில் செய்து வருகிறேன். விவசாயமும் செய்து வருகிறேன். நானும் என்னுடைய சகோதரர் 4ம் பிரதிவாதியும் சேர்ந்து அச்சு தொழில் 35 வருடங்களாக செய்து வருகிறோம். என் தந்தை உயிருடன் இருக்கும் போது இருந்தே செய்து வருகிறோம். பூர்வீக வீட்டில் தான் அச்சு தொழிலை செய்து வருகிறோம். அந்த வீடு எனது அப்பாவின் அப்பா மூலமாக வந்தது.

2) எனது அப்பாவிற்கு பூர்வீக சொத்துக்களில் பாகபிரிவினை தேதி 12.05.1975 நம்பர் 112/77 மூலமாக பாகம் வந்ததுஎன்றால் சரிதான். பூர்வீக வீடு மிகவும் இடிந்த நிலையில் இருந்ததால் அதை இடித்து விட்டு புதிய வீடு கட்டப்பட்டது. வாரிசுதாரர்கள் அனைவரிடமும் தெரிவித்து விட்டு அவர்களின் சம்மதம் பெற்று தான் பழைய வீட்டை இடித்து விட்டு புதியதாக

வீடு கட்டப்பட்டது. என் அப்பா 21.11.2007 கொளந்தையம்மாள் மற்றும் பலரிடம் கிரைய பத்திர எண் 1070/2007 மூலம் கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியும். 23.07.2001 தேதியிட்ட பாகபிரிவினை பத்திரத்தில் 1ம் பிரதிவாதி தரப்பினர் இல்லை. மற்ற பிரதிவாதிகள் இருக்கிறார்கள். வாதி அந்த பாகபிரிவினை பத்திரத்தில் பொய்யாக கையெழுத்து போடவில்லை என்று சொல்கிறார். அந்த பாகபிரிவினை பத்திரமே உண்மை இல்லாததால் தான் 1ம் பிரதிவாதி அதில் தரப்பினர் இல்லை என்றாலும், அதில் வாதியின் கையெழுத்தை நானே தவறுதலாக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

3) பட்டா எண் 298 பச்சியப்ப செட்டியார் பெயரில் தான் 2021 வரை இருந்தது என்றால் சரியல்ல. இந்த வழக்கு போட்ட பிறகு 2022ல் பச்சியப்ப செட்டியாரின் பெயரை பட்டா எண் 298ஐ நீக்கிவிட்டு என் பெயரையும், 4ம் பிரதிவாதி பெயரையும் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. பட்டா எண் 303, 366 தற்போதும் பச்சியப்ப செட்டியார் மற்றும் அவருடைய வாரிசுதாரர்கள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். பட்டா எண் 303, 366ல் பழனியம்மாவை தவிர மற்ற வாரிசுதாரர்கள் பெயர்கள் உள்ளது என்றால் சரிதான்.

4) பட்டா எண் 522, 587 தற்போதும் பச்சியப்ப செட்டியார் மற்றும் அவருடைய வாரிசுதாரர்கள் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. பச்சியப்ப செட்டியார் பெயரில் மட்டும் தான் உள்ளது. 2022ல் பட்டா 298 என் அப்பா பச்சியப்ப செட்டியார் பெயரை நீக்கி விட்டு பட்டாவை என் பெயரையும், 4ம் பிரதிவாதியின் பெயரை சேர்க்க சொல்லி கொடுத்த மனுவில் அனைத்து

ஆவணங்களையும் இணைத்து இருந்தேன். மற்ற வாரிசுகள் தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று எழுத்து பூர்வமாக எழுதி கொடுக்கவில்லை. ஆட்சேபனை இல்லை என்று சொன்னார்கள்.

5) என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் வாதி, 1, 2 பிரதிவாதிகளுக்கு தலா 5 லட்சம் ரூபாய் கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். 2009ல் மேற்சொன்ன பணம் கொடுக்கப்பட்டது. எப்போது பணம் கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. ஆனால் பணம் கொடுத்ததை பற்றி மட்டும் சொல்லியிருக்கிறேன். பணம் ரொக்கமாக கொடுக்கப்பட்டது. பணம் ரொக்கமாக கொடுக்கப்பட்டது என்று என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது. என் அப்பாவின் சொத்தை விற்று அந்த பணத்தில் தான் பணம் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எந்த சொத்தை விற்று பணம் கொடுக்கப்பட்டது என்ற சொத்தின் விவரத்தை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை. விற்ற பத்திரத்தின் நகலை நான் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

6) என் அப்பா இறந்த பிறகு 2019க்கு பிறகு வாதி ,1 2, பிரதிவாதிகள் விடுதலை பத்திரம் எதுவும் எழுதி கொடுக்கவில்லை. 2001ல் பாகபிரிவினை ஏற்பட்டதால் சொத்துக்கள் என் பெயரில் மாறியது. பாகபிரிவினையில் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் மட்டும் தான் என் பெயரில் பட்டா மாறியது. மற்ற சொத்துக்கள் என் அப்பா பெயரில் அப்படியே உள்ளது. 2019ல் என் அப்பா இறப்பதற்கு 4 மாதங்கள் முன்பாக என் சித்தப்பா லட்சுமண செட்டியார், கோவிந்தன், அகிலன், வாதி, 1, 2 பிரதிவாதிகளை வைத்து மீதி

சொத்துக்களை எனக்கும், 4ம் பிரதிவாதிக்கும் கொடுக்க வேண்டும் என்று வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டோம். 2021ல் வாய் மொழி பாகம் ஏற்பட்டதாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 2019ல் ஏற்பட்ட பாகபிரிவினையில் யாரும் ஒப்பு கொள்ளாததால் தான் சொத்து பிரச்சனை இருப்பதால் தான் 2021லிலும் பாகபிரிவினை ஏற்பட்டதாக நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7) நான் 1ம் பிரதிவாதியின் மகளையும், 4ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியின் மகளையும் திருமணம் செய்து கொண்டிருக்கிறோம் என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகள் ஒரே குடும்பமாக இருப்பதாலும், வாதியை மட்டும் வேறு குடும்பத்தில் திருமணம் செய்து கொடுத்திருப்பதால் அவருக்கு சொத்தில் பாகம் கொடுக்க மாட்டோம் என்கிறோம் என்றால் சரியல்ல. பூர்வீக வீட்டை இடித்து புதியதாக கட்டும் போது வாதி, பிரதிவாதிகளிடம் நான் அனுமதி வாங்கினேன். நான் கிரக பிரவேசம் செய்யவில்லை. வீடு கட்டுவதற்கு வங்கியில் கடன் வாங்கியுள்ளேன். வங்கியில் கடன் வாங்கியதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. என்ன என்ன ஆவணங்கள் கொடுத்து வங்கியில் கடன் வாங்கப்பட்டது என்று எனது தம்பிக்கு தான் தெரியும். மற்ற பிரதிவாதிகளுக்கும் சேர்த்து தான் நான் இந்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி பெயரில் தான் வங்கி கடன் வாங்கப்பட்டது. நீதிமன்றத்தில் வங்கி கடன் ஆவணங்களை நான் தாக்கல் செய்கிறேன். பாகம் பிரியாத பூர்வீக வீட்டின் பேரில் வங்கி கடன் வாங்கியது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

8) எனக்கு சொந்தமான சொத்துக்களை அடமானம் வைத்து கே.பி.எம். திருமண மண்டபத்தை கட்டுவதற்கு கடன் வாங்கியுள்ளேன். அந்த அடமானம் மீட்கப்பட்டு விட்டது. தேதி நியாபகம் இல்லை. பி.சா.ஆ.7 வில்லங்க சான்றிதழ் 11.8.2021ல் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தில் ஆவண எண் 405/2005 அடமானம் பச்சியப்ப செட்டியார், மாதையன், குமார் (எ) ஜெயகுமார் அவர்களால் செலுத்தப்பட்டதாக ரசீது கொடுக்கப்பட்டதாக உள்ளது என்றால் என் அப்பா பெயர் தவறாக வந்துள்ளது. பி.சா.அ.7 வில்லங்க சான்றதழில் 9.7.2008 பிரதிவாதிகளுக்கு இடையே ஒரு உடன்படிக்கை ஆவணம் ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது சரிதான். சொத்துக்கள் 2001ல் எங்களுக்கு பாகபிரிவினையில் கிடைக்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். 2013ல் அந்த உடன்படிக்கை ரத்து செய்யப்பட்டு விட்டு என்றால் சரிதான். 10.07.2008 தேதியிட்ட உடன்படிக்கை பத்திரம் பற்றியும், 2013ல் ஏற்பட்ட ரத்து பத்திரம் பற்றியும் என்னுடைய பதிலுரையும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

9) என் அப்பாவின் சொத்தை தான் நான் அடமானம் வைத்து பணம் பெற்றேன் என்றால் சரியல்ல. என் அப்பா பெயரில் இருந்து என் பெயருக்கு மாறிய சொத்திற்கு தான் நான் கடன் வாங்கியுள்ளேன். 2005ல் தொழில் முதலீடு கழகத்தில் அடமானம் வைத்த சொத்துக்களை தான் 2008ல் உடன்படிக்கை போடப்பட்டது என்றால் சரியல்ல. என் அப்பாவின் சொத்துக்களை தான் அடமானம் போட்டுள்ளேன் என்றாலும், அதே சொத்துக்கள் சம்பந்தமாக தான் உடபடிக்கை ஏற்படுத்தி கொண்டுள்ளேன்

என்றாலும், அதை மறைத்து தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)*